செய்தி வெளியீட்டு எண்:198 நாள்: 28.06.2021

## காரனூர் பெரியேரி மற்றும் ஏமப்பேர், மணிமுக்தா அணைக்கட்டு பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள காரனூர் பெரியேரி மற்றும் ஏமப்பேர் அணைக்கட்டு மற்றும் மணிமுக்தா அணைப்பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள் இன்று (28.06.2021) ஆய்வு செய்தார்.

காரனூர் பெரியேரியில் குடிமராத்து 2020 - 2021 திட்டத்தின் கீழ் முடிவுற்ற புணரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார். கோமுகி ஆற்றின் குறுக்கே உள்ள ஏமப்பேர் அணைக்கட்டில் குடிமராத்து 2019 -2020 திட்டத்தின் கீழ் முடிவுற்ற புணரமைப்பு பணிகளை பார்வையிட்டு அதன் விவரங்களை கேட்டறிந்தார். அதன் பின்னர், மணிமுக்தா அணை பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். மேலும், இவ்வாய்வின்போது பொதுப்பணித்துறை உதவி பொறியாளர்கள் திரு. கணேசன், வினோதினி மற்றும் அரசு அலவலர்கள் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.